Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 05, 2023

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 05, 2023 | ஒளி: 09 கதிர் 077 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# ரூபாயின் பெறுமதி உயர்வு; பங்குச் சந்தையும் வளர்ச்சி



இலங்கை மத்திய வங்கியினால் திங்கட்க்கிழமை (04) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



## 2019 ஈஸ்டர் தாக்குதலுக்கு

# ராஜபக்ஷ குடும்பத்தின் விசுவாசிகள் உடந்தை

- ஆவணப்படத்தை இன்று அம்பலப்படுத்துகிறது சனல் 4
- உயர் மட்ட உண்மை விளம்பிகள் குற்றச்சாட்டு

ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான இலங்கை அதிகாரிகள் 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புக்கு உடந்தையாக இருந்தனர் என்று உயர் மட்ட உண்மைவிளம்பிகள் குற்றம் சாட்டுவதாக இங்கிலாந்தை தளமாகக் கொண்ட டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதிக்கு மரண அச்சுறுத்தல் பதிவு

### 19 வயது இளைஞர் கைது

தனது பேஸ்புக் பக்கத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பதிவிட்ட 19 வயது இளைஞர் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# லிட்ரோ சிலிண்டர் விலை உயர்ந்தது




12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை திங்கட்கிழமை (04) நள்ளிரவுமுதல் அமுலாகும் வகையில் 145 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்த வகையில், 2982 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர் 3,127 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

# மருத்துவ தவறால் இடது கையை இழந்த சிறுமி

■ புகஜிந்தன்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட எட்டு வயது சிறுமி ஒருவருக்கு ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்க வேண்டிய துப்பாக்கிய சூழல் ஏற்பட்டது.

தொடர்ச்சி P2

# இரத்த வெள்ளத்தில் மனநல ஆலோசகர் சடலமாக மீட்பு

தலங்கம நெரலு உயன பகுதியில் உள்ள ஹோட்டல் அறையில் இருந்து மனநல ஆலோசகரான பெண்ணொருவரின் சடலம் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2




# படகு மூலம் தமிழகம் சென்று பேச யாழ். மீனவர்கள் தீர்மானம்

■ புகஜிந்தன்

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதாக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்தனர்.

தொடர்ச்சி P2

# மரணத்துக்கு பயப்படும் கோழை அல்ல நான்

### எந்த சவாலையும் சந்திக்க தயார் என்கிறார் சஜித்

தான் மரணத்துக்கு பயப்படும் கோழை அல்ல என்றும் எந்த ஒரு சவாலையும் சந்திக்க தயாராக இருப்பதாகவும், ராஜபக்ஷவுடன் தான் ஒருபோதும் ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




# ரூ. 705.8 பில். பெறுமதியான நாணயத்தாள்கள் அழிப்பு

2018ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப்பகுதியில் 705.8 பில்லியன் ரூபாய் பெறுமதியான 1.52 பில்லியன் நாணயத் தாள்கள் அழிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் சுத்தமான மற்றும் தரமான நாணயங்களின் புழக்கத்தை உறுதி செய்வதற்காக மத்திய வங்கி அவ்வப்போது சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை அழித்து வருகிறது.

அந்த வகையில், 2022ஆம் ஆண்டில் சேதமடைந்த அல்லது சிதைக்கப்பட்ட 207.3 பில்லியன் ரூபாய் பெறுமதியான 238.5 மில்லியன் நாணயத்தாள்களை அழித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

தொடர்ச்சி P2



# சுற்றுலா பயணிகளின் வருகை 9 இலட்சத்தை தாண்டியது

2023ஆம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் செய்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 9 இலட்சத்தை தாண்டியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

தொடர்ச்சி P2




## தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்ற

# மரண காரணத்தை கண்டறிய மாதிரிகள் அனுப்பி வைப்பு

### மரபணு மாதிரி இந்தியாவுக்கும் மருந்து மாதிரி ஆஸிக்கும் சென்றது

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நுண்ணுயிர் கொல்லி மருந்து வழங்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தவரின் உயிரியல் மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக

தொடர்ச்சி P2



# நீர் மின் உற்பத்தி 14% ஆக உயர்ந்தது

வறட்சியினால் கடந்த நாட்களில் 11 - 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்த நீர் மின் உற்பத்தி 14 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2




## நீதிமன்ற அவமதிப்பு என்பது

# நீதிமன்ற ஆட்சி, அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்துகிறது

■ பாறுக் ஷிஹான்

நீதிமன்ற அவமதிப்பு என்பது நீதிபதிகளை அவமதிக்கவில்லை என்றும் அது நீதிமன்ற ஆட்சியினையும், அதிகாரத்தினையும் கேள்விக்கு உட்படுத்துகிறது என்றும்நீதிமன்றத்தின் சட்டவாட்சியினையும் அதிகாரங்களையும் சில பேர்வழிகள் கேள்விக்குட்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளமையினை தாம் அவதானித்துள்ளதாகவும் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மட்டக்களப்பு வைத்தியசாலைகளில்

# நோயாளர், ஊழியர்களுக்கான இலவச உணவு இடைநிறுத்தம்

■ கனகராசா சரவணன்

உணவு விநியோகத்தர்களுக்கு பணம் வழங்காத காரணத்தினால் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சில வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கான உணவு விநியோகம் கடந்த 1ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது

ஆதார வைத்தியசாலை, மாவட்ட மற்றும் கிராமிய வைத்தியசாலைகளில் உணவு விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் நோயாளிகள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள் பெருதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒன்றினைந்த சுகாதார ஊழியர் சங்க மட்டு மாவட்ட இணைப்பாளர் மாணிக்கராஜா லோகராஜ்குமார் தெரிவித்தார்.

இந்த இலவச உணவு இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக ஒன்றினைந்த சுகாதார ஊழியர் சங்க மட்டு மாவட்ட தலைவர் மாணிக்கராஜா லோகராஜ்குமார், திங்கட்கிழமை (04) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

“அரசாங்கத்தினால் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்

தொடர்ச்சி P2

# க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

### நவம்பரில் 2023 உ/த பரீட்சை




2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள், திங்கட்கிழமை (04) வெளியிடப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஜனாதிபதிக்கு மரண அச்சுறுத்தல் பதிவு

"குறிபார்த்து சுடும் ஒருவரை (ஸ்னெய்ப்பர்) நாம் கண்டுபிடிக்க முடியாதா? நாட்டை நாசப்படுத்தியவன் வருகிறான்" என்று முகநூலில் பதிவிட்ட எப்பாவல, மெடியாவ பகுதியைச் சேர்ந்த குறித்த இளைரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்புத்தேகம மற்றும் எப்பாவல பகுதிகளுக்கு வியாழக்கிழமையன்று (07) ஜனாதிபதி விஜயம் செய்யவுள்ள நிலையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரின் பதிவைக் கண்டுபிடித்ததும், குற்றப் புலனாய்வு திணைக்கத்தினர் துரிதமாகச் செயல்பட்டு, அவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## லிட்ரோ சிலிண்டர் விலை உயர்ந்தது

மேலும், 5 கிலோகிராம் மற்றும் 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் முறையே 58 மற்றும் 26 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், 1,198 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 1,256 ரூபாய்க்கும் 561 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 587 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ தவறால் இடது கையை இழந்த சிறுமி

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், காய்ச்சல் காரணமாக குறித்த சிறுமி அனுமதிக்கப்பட்ட நிலையில் நோய் எதிர்ப்புக்காக ஊசி மூலம் மருந்து ஏற்றப்பட்டது.

ஊசி ஏற்றப்பட்ட மறுநாள் இரவு சிறுமி வலியினால் அவதிப்பட்ட நிலையில் குறித்த விடுதியில் கடமையில் இருந்த தாதியர்களிடம் சிறுமியின் நோய்நிலை தொடர்பில் தாயார் கூறிய போது ஊசி ஏற்றப்பட்டால் நோய் இருக்கும் என விடுதியின் தாதியர்கள் பொறுப்பற்ற விதத்தில் பதில் அளித்ததாக பெற்றோர் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சிறுமியின் கை நரம்பு பாதிக்கப்பட்டமை உணர்ந்த வைத்தியர்கள் அதனை அகற்ற வேண்டும் எனத் தெரிவித்த நிலையில் சனிக்கிழமை (02) காலை சத்திர சிகிச்சை மூலம் குறித்த சிறுமியின் மணிக்கட்டுக்குட்பட்ட பகுதி அகற்றப்பட்டது.

சிறுமி அனுமதிக்கப்பட்ட விடுதியின் பொறுப்பு வைத்தியர் குறித்த தினத்தில் கடமையில் இருந்தாரா என்பது தொடர்பில் சந்தேகங்கள் எழும் நிலையில் விடுதியில் இருந்த தாதியர்களின் அலட்சியப் போக்கும் சிறுமியின் கை அகற்றப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளது என்ற குற்றச்சாட்டு வலுவாக முன்வைக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியை தொடர்பு கொண்டு கேட்டபோது, இடம்பெற்ற சம்பவம் மனவேதனையை உண்டு பண்ணும் ஒரு சம்பவமாக பார்க்கிறேன் என்றார்.

## இரத்த வெள்ளத்தில் மனநல ஆலோசகர் சடலமாக மீட்பு

உயிரிழந்தவர் 46 வயதுடைய மனநல ஆலோசக ஒருவரென விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், விரிவுரையாளராக பணிபுரியும் இவர் கடந்த 26ஆம் திகதி முதல் இந்த விடுதியில் உள்ள அறையில் தங்கியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி வெளியில் சென்று திரும்பும் மற்றொரு நபருடன் அவர் ஹோட்டலில் தங்கியிருந்ததாகவும், அவர் கடைசியாக சனிக்கிழமை (02) வெளியே சென்றுள்ளதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பெண் மற்றும் மற்ற அடுத்த காணாமல் போனதை கவனித்த ஹோட்டல் ஊழியர்கள் கதவைத் தட்டிய போது எந்த பதிலும் இல்லாததால் வலுக்கட்டாயமாக கதவைத் திறந்த போது குறித்த பெண் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

குறித்த சடலத்தின் கழுத்து பகுதியில் வெட்டுக்காயங்கள் காணப்படுவதாகவும்

சடலமாக மீட்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ள தலங்கம பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ராஜபக்ஷ குடும்பத்தின் விசுவாசிகள் உடந்தை

இங்கிலாந்தின் சனல் 4 தொலைக்காட்சியில் இன்றையதினம் (05) ஒளிபரப்பப்படவுள்ள ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்த ஆவண நிகழ்ச்சி குறித்தே மேற்குறிப்பிட்ட தகவலை அந்த ஊடகம் வெளியிட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின் பின்னர் சிரேஷ்ட இராணுவ புலனாய்வுத் துறை அதிகாரியான சுரேஷ் சாலி தன்னிடம் வந்து, ராஜபக்ஷர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல் தேவை என்றும் கோட்டாபய ஜனாதிபதியாக வருவதற்கு அதுவே ஒரே வழி என்றும் ஹன்சீர் ஆசாத் மௌலானா தெரிவித்தாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாக்குதல் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல என்றும் இரண்டு, மூன்று வருடங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சாலி இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதல்களில் சக்தி வாய்ந்த ராஜபக்ஷ குடும்பத்தின் தொடர்பு இருப்பதாக நீண்ட காலமாக இலங்கையில் வதந்திகள் பரவி வந்த போதும், சனல் 4 செய்தியின் முன்னாள் ஆசிரியர் பென் டி பியர் நிறுவிய பேஸ்மென்ட் பிலிம்ஸ் தயாரித்த ஆவணப்படத்தில், உயர்மட்ட உண்மைவிளம்பி (ஓர் அமைப்பின் உள்ளிருந்து கொண்டே அதில் நடக்கும் தவறுகளை அம்பலப்படுத்துபவர்) பேசுவது இதுவே முதல் முறையாகும் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது உண்மை விளம்பியான மௌலானா பல ஆண்டுகளாக ராஜபக்ஷர்களுக்கு விசுவாசமான அரசியல்வாதியான பிள்ளையானுக்கு உதவியாளராக பணியாற்றியதுடன், அரசியல் எதிரியை கொலை செய்த குற்றச்சாட்டில் சிறையில் இருந்தபோது குண்டுதாரிகளை சந்தித்துள்ளார்.

கடந்த ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறிய மௌலானா ஐரோப்பிய புலனாய்வு அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையிடம் தனது சாட்சியத்தை முன்வைத்துள்ளார்.

இரண்டாவது உண்மை விளம்பியான, பெயரிடப்படாத சிரேஷ்ட அரசாங்க அதிகாரி, தாக்குதலாளியுடன் சாலியின் உறவுகள் பற்றிய மௌலானாவின் கருத்தை ஆதரித்துள்ளார் என்றும் அந்த ஊடகம் தெரிவிக்கிறது.

குற்றச்சாட்டுகளை "முற்றிலும் பொய்" என்றும், திரைப்பட தயாரிப்பாளர்களுடன் பேசிய நபர்களுடன் எந்த தொடர்பும் இல்லை என்றும் சேனல் 4 க்கு எழுதிய கடிதத்தில் சாலி மறுத்துள்ளார்.

சனல் 4 இன் கருத்துக்கு பிள்ளையானோ அல்லது ராஜபக்ஷ குடும்பத்தினரோ பதிலளிக்கவில்லை என்றும் அந்த ஊடகம் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## சுற்றுலா பயணிகளின் வருகை 9 இலட்சத்தை தாண்டியது

சபையினால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, இந்த வருடம் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை 9 இலட்சத்து 4 ஆயிரத்து 318 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 சுற்றுலாப் பயணிகள் 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்திருந்த நிலையில், இந்த வருடத்தின் 8 மாதங்களிலேயே அந்த தொகை 9 இலட்சத்தை தாண்டியுள்ளது.

## ரூ. 705.8 பில். பெறுமதியான நாணயத்தாள்கள் அழிப்பு

2021ஆம் ஆண்டில் 44.3 பில்லியன் ரூபாய் பெறுமதியான மதிப்பிழந்த 108.2 மில்லியன் நாணயத்தாள்களையும் 2020ஆம் ஆண்டு 62.2 பில்லியன் ரூபாய் பெறுமதியான 127.3 மில்லியன் நாணயத் தாள்களையும் அழித்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அதேபோல 2019ஆம் ஆண்டில் 139.8 பில்லியன் ரூபாய் பெறுமதியான 235 மில்லியன் நாணயத்தாள்களும் 2018 ஆம் ஆண்டில் 252.2 பில்லியன் ரூபாய் பெறுமதியான மதிப்பிழந்த 343.8 மில்லியன் நாணயத்தாள்களும் இலங்கை மத்திய வங்கியினால் அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீர் மின் உற்பத்தி 14 %ஆக உயர்ந்தது

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்கின்ற போதிலும், நீர் மின் நிலையங்களை சூழவுள்ள பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவு மழைவீழ்ச்சி பதிவாத காரணத்தால் நீர்மின் உற்பத்தியில் பாரிய அதிகரிப்பு ஏற்படவில்லை.

இதேவேளை, சமனல வாவியில் ஏற்பட்டுள்ள நீர் கசிவை சீரமைப்பது தொடர்பில் புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் மற்றும் மின்சார சபையின் பொறியியலாளர்கள் இணைந்து மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

சமனல வாவியின் 6 இடங்களில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

## நீதிமன்ற ஆட்சி, அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்துகிறது

உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் மற்றும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்ற போது, அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "நீதிமன்றங்களும், சட்டத்துறைகளும் சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நீதிமன்றத்தின் சட்டவாட்சியினையும் அதிகாரங்களையும் சில பேர்வழிகள் சவாலுக்கு உட்படுத்தும் நிலையினை அவதானிக்க முடிகிறது. எனவே இது தொடர்பில் நீதிபதிகள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச் செயல் உங்கள் முன்னால் நடக்குமென்றால், நீதிபதிகளே அந்த வழக்கை எடுத்து விசாரித்து, அவமதிப்பைச் செய்தவருக்கு தண்டனை வழங்க முடியுமென்று லோட் டெனிங் எழுதிய 'சட்டத்தின் ஒழுக்கம்' எனும் நூலில் குறிப்பிடுகின்றார். நீதிமன்ற அவமதிப்பு என்பது நீதிபதிகளை அவமதிக்கவில்லை. அது நீதிமன்ற ஆட்சியினையும், அதிகாரத்தினையும் கேள்விக்கு உட்படுத்துகிறது. எனவே, நீதிமன்ற அவமதிப்பு என்பதை நீதிபதிகள் தனிப்பட்ட விடயமாக எடுக்கத் தேவையில்லை" என்றார். இதன் போது ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் எழுதிய 'Lawof Actions' என்ற நூலின் அறிமுகமும் இடம்பெற்றது.

## மரண காரணத்தை கண்டறிய மாதிரிகள் அனுப்பி வைப்பு

இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், நுண்ணுயிர் கொல்லி மருந்தின் மாதிரிகள் மேலதிக விசாரணைக்காக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பி வைக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பெறுபேறுகள் கிடைத்த பின்னரே மரணம் தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

வெட்டுக் காயத்துக்கு சிகிச்சை பெற்ற வரக்காபொலயைச் சேர்ந்த 50 வயதான நபரேகோ - அமொக்சிகிளேவ் எனப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்து வழங்கப்பட்டதை அடுத்து உயிரிழந்தார்.

இதேவேளை, குறித்த மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார்.

## க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

இதேவேளை, 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நவம்பர் மாதம் நடைபெறும் என்று கல்வி அமைச்சு, திங்கட்கிழமை (04) அறிவித்துள்ளது.

நவம்பர் 27ஆம் திகதி முதல் டிசெம்பர் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பரீட்சைக்கு இதுவரை 323,913 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டது.

ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் உரிய நேரத்தில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடத் தவறியமையே முன்னைய பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதத்துக்கு முக்கிய காரணம் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நவம்பரில் 2023ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சைக்கான நடைபெறுவதற்கு மேற்குறிப்பிட்ட காரணத்தை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## நோயாளர், ஊழியர்களுக்கான இலவச உணவு இடைநிறுத்தம்

நோயாளிகள் மற்றும் பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் உணவு வழங்கும் நிறுவனங்கள் ஊடாக 3 நேர சமைத்த இலவச உணவு வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இவ்வாண்டு குறித்த சேவை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது முடிவடைந்துள்ளதால் அதற்கான நிதி இல்லாமையினாலும் நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் ஒப்பந்தம் செய்து கொண்ட உணவு வழங்கும் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒப்பந்த காரர்களுக்கு பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் கடித மூலம் அறிவித்ததையடுத்து இலவச உணவு வழங்கள் கடந்த முதலாம் திகதியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மாகாண பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழ் உள்ள மட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட வாழைச்சேனை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைகள் , மாவட்ட, கிராமிய வைத்திய சாலைகள் உட்பட 52 வைத்தியசாலைகளுக்கான இலவச உணவு நிறுத்தப்பட்டுள்ளன.

## ரூபாயின் பெறுமதி உயர்வு; பங்குச் சந்தையும் வளர்ச்சி

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 313 ரூபாய் 93 சதமாகவும் விற்பனை விலை 326 ரூபாய் 28 சதமாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண், திங்கட்கிழமை (04) கணிசமான இலாபத்தைப் பெற்றுள்ளது.

அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணானது, 218.22 புள்ளிகள் அல்லது 1.96 புள்ளிகள் உயர்ந்து 11,374.64 புள்ளிகளில் நிறைவடைந்தது.

நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் கொழும்பு பங்குச் சந்தையின் மொத்த புரள்வு 3.32 பில்லியன் ரூபாயாக பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## படகு மூலம் தமிழகம் சென்று பேச யாழ். மீனவர்கள் தீர்மானம்

இந்தியாவின் தமிழகத்துக்கு, 14 பேர் கொண்ட வட பகுதி மீனவர்கள் கடல் வழியாக படகு மூலம் சென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பாஜக தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரை சந்தித்து பேச தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ், "கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றை கையளித்தோம்.

குறித்த மகஜர் கையளித்து 14 நாட்களுக்குள் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் காத்திரமான நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்த நிலையிலேயே குறித்த முடிவை எட்டியுள்ளோம்.

14 நாட்களுக்குள் தீர்வு காணப்படாவிடில் அடுத்து வரும் நாட்களில் குறித்த பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

## மரணத்துக்கு பயப்படும் கோழை அல்ல நான்

அரசாங்கப் பிரதிநிதிகளின் குழு ஒன்று கோயபல்ஸின் ஊடகக் கொள்கையை முன்வைத்து ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சஜித் போட்டியிட மாட்டார் என்ற போலிச் செய்தியை கட்டமைத்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது கோட்டபாயவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன்னை தோற்கடிக்க முயற்சித்தவர்களே இவ்வாறான அறிக்கைகளை கூறிவருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்பதே இவர்களுக்குக் கூறக்கூடிய பதில் என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலையீட்டில் விவசாயத்துக்கு விடியல் வேலைத்திட்டத்தின் கீழ் 40 வருடங்களின் பின்னர் கிரிதிஓயா திட்டத்திற்குச் சொந்தமான தெற்கு கால்வாயை புனரமைக்கும் பணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுவாக வரட்சியான காலநிலையின் போது அணைகள் மற்றும் கால்வாய்கள் பொதுவாக புனரமைக்கப்பட்டு நீர்ப்பாசன மறுசீரமைப்பு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றாலும், அண்மைய நாட்களில் இவ்வாறான நீர்ப்பாசன மறுசீரமைப்பு திட்டங்கள் நாட்டில் காணப்படவில்லை என்பதனால் நடைமுறை முற்போக்கு எதிர்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரம் இன்றி இருந்தாலும் இவ்வாறான நீர்ப்பாசன மறுசீரமைப்பு திட்டங்களை மேற்கொண்டு இந்நாட்டில் விவசாயத்தை வலுப்படுத்த பங்களிப்பை வழங்குவதாக தெரிவித்தார்.

அத்துடன்,கிரந்திஓயா திட்டம் மாத்திரமல்லாது நாட்டின் விவசாயமும் நவீனமயப்படுத்தப்பட்டு,நவீன முறைகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக விவசாயம் அபிவிருத்தி செய்யப்படும் என்றும்,நெல்லுக்கான நிலையான விலை சூத்திரம் ஸ்தாபிக்கப்பட்டுத்தரப்படும் என்றும் தெரிவித்தார்.

இதன் பிரகாரம், 40 வருடங்களின் பின்னர் கிரிதிஓயா திட்டத்தின் தெற்கு கால்வாயில் 26 கிலோமீற்றர் நீளமான நீர்வாழ் தாவரம் மற்றும் வண்டல் மண் அகற்றும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும்,அரசாங்கத்திடம் பணம் இல்லாமையினால் 10 ஆயிரத்துக்குக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு எரிபொருளையும் வழங்கவுள்ளதாகவும் இங்கு தெரிவித்தார்.

நம் நாடு விவசாய நாடு என்பதால்,நாட்டில் விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்றும், முடிந்தால் பெரும்போக சிறுபோக பருவங்களுக்கு மேலதிகமாக இடைக்கால போகத்திற்கும் செல்ல வேண்டும் என்றும், அதனூடாக அதிகளவான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் என தெரிவித்தார்.

இன்று நாட்டில் உணவுப் பாதுகாப்பை விடுத்து, உணவுப் பாதுகாப்பின்மையே ஏற்பட்டுள்ளதாகவும், நாட்டின் நீர்ப்பாசன முறைமைகளை முற்றாக புனரமைப்பதே தனது முதல் படியாகும் என அவர் தெரிவித்தார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு வர்த்தகர்களின் நம்பிக்கையை வென்று ஊழலும், மோசடியும், திருட்டும் இன்றி நாட்டுக்கான பணிகளைச் செய்வதற்குத் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ளும் முறை தனக்குத் தெரியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எந்நிலையிலும் நெல்லுக்கு உத்தரவாத விலை தரும் விலைச்சூத்திரத்தை வழங்கத் தயாராக இல்லாத இந்த அரசை விவசாய விரோத அரசு என்றே அழைக்கலாம் என்றும், கடந்த அரசாங்கத்தின் போது குறித்த அரசாங்கத்தின் தலைவர்கள் விவசாயிகளை அவமானப்படுத்தி விமான நிலையங்களில் கூட அரிசியை களஞ்சியப்படுத்தி வைத்தனர் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், கல்வி அதிகாரிகளின் திறமையின்மையால்,கல்விப் பொதுத்தராதர மாணவர்களுக்கு பெரும் அநீதி நேர்ந்துள்ளது.

தற்போது உயர்தரப் பரீட்சைக்கான பாடத்திட்டம் சரியாக பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், தற்போதைய நிலவரப்படி 2022 உயர் தர பரீட்சைப் பெறுபேறு முடிவுகள் கூட வெளியிடப்படாமல் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டு உயர் தரப்பரீட்சை நவம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 2022 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



# மனைவிக்கு ஆண் குழந்தை தந்தை அதிரடியாக கைது

தன்னுடைய மனைவி, ஆண் குழந்தையை பிரசவித்ததை அடுத்து, அக்குழந்தையின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவமொன்று மொனராகலையில் இடம்பெற்றுள்ளது.

மொனராகலை, கலபெத்த, அம்பலாந்த பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி ஒருவர் மொனராகலை பொது வைத்தியசாலையில் கடந்த (31) ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சிறுமி மொனராகலை அலியாவத்தை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஒன்பதாம் தரம் வரை கல்வி கற்று பின்னர் தனது தாயுடன் கூலி வேலைக்குச் சென்றுள்ளார்.

இவர் அம்பலாந்த பிரதேசத்தில் கரும்பு வெட்டச் சென்ற போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞருடன் காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

பெரியவர்களின் சம்மதத்தின் பேரில், மொனராகலை பிரதேசத்தில் உள்ள திருமணப் பதிவாளர் ஒருவரால், சிறுமிக்கு 19 வயது எனக் கூறி சட்டப்பூர்வமாக திருமணம் செய்து வைத்துள்ளார்.

பின்னர் இருவரும் அம்பலாந்த பகுதியில் உள்ள இளைஞரின் வீட்டில் ஒன்றாக வசித்து வந்த நிலையில் கடந்த மாதம் 31ஆம் திகதி மொனராகலை பொது வைத்தியசாலையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. திருமணமானபோது அவளுக்கு 14 வயது 07 நாட்கள் என அறியமுடிகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய கணவரை கைது செய்து விசாரணைகளை மொனராகலை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# “கிழக்கு ஆளுநர் தோல்வி கண்டுள்ளார்”

அபு அலா

கிழக்கு மாகாண கல்வித்துறையினரால் திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதியைக் கலைந்து நியாயம் வழங்குவதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தோல்வி கண்டுள்ளார் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சில பாடங்களுக்கு போதுமானளவு அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும் திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனை சமப்படுத்தி இக்குறையைப் போக்கவுள்ளதாக கிழக்கு ஆளுநர் உறுதியளித்திருந்தார்.

கிழக்கு ஆளுநராக கடமையேற்று 3 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் இந்த ஆசிரியர் சமப்படுத்தல்களை அவரால் செய்ய முடியவில்லை. இந்த விடயத்தில் அவர் உறுதியளித்த காலங்களும் கடந்து



விட்டன. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதுடன், இம்மாவட்ட மாணவர்களுக்கு கற்றலில் சமவாய்ப்பு வழங்குவதில் கிழக்கு ஆளுநர் தோல்வி கண்டுள்ளார் என்று கருத வேண்டியுள்ளது என்றார்.

கடந்த 2 மாதங்களுக்கு முன் வழங்கப்பட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரிடம் நான் கோரிக்கை விடுத்திருந்தேன்.

கிழக்கில் போதுமானளவு ஆசிரியர்கள் அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதால் சமப்படுத்தல்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் என அப்போது எனக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

எனினும், இதுவரை திருகோணமலை மாவட்ட ஆசிரிய பற்றாக்குறை நிவரத்திக்கப்படவில்லை. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வரும் அதேவேளை இம்மாவட்டத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர்களும் வேறு மாகாணங்களுக்கு நிமிக்கப்பட்டதால் பெரும் சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர் என்றார்.



# சாய் சரணாலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி

கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின் மேல்மாடியில் அமைந்துள்ள சீரடி சாய் நாத சரணாலயத்தில் புதன்கிழமை (06) மாலை 4 முதல் 6 மணிவரை கிருஷ்ண ஜெயந்தி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

சிறுவர், சிறுமிகள் பங்கேற்கும் சிறப்பு நிகழ்வாக கிருஷ்ணனின் பலவித உருவப்படங்களுக்கு நிறந்தீட்டல், வினாவிடைபோட்டி, கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். மாலை 5 மணிக்கு ஸ்ரீ வரதாரஜ விநாயகர் ஆலயத்திலிருந்து பால கிருஷ்ணனை மேளதாளத்துடன் ஊர்வலமாக சாய் சரணாலயத்திற்கு சிறுவர்கள் அழைத்து வருவார்கள். தொடர்ந்து வரும் தொட்டிலிடல், தாலாட்டு பாடல் நிகழ்வில் பக்த அடியார்கள் எல்லோரும் கலந்துகொள்ளலாம்.

மாலை 5:15 முதல் 5:30 வரை கிருஷ்ண பகவானுக்கு துளசி அர்ச்சனையும் (பக்த அடியார்கள் தங்கள் கரங்களினால் கிருஷ்ண பகவானை அர்ச்சனை செய்யலாம்). கிருஷ்ணாவுக்கு பிடித்த பிரசாதம் லட்டு, வெண்ணெய், முறுக்கு, சீடை போன்ற பிரசாதம் நைவேத்தியமும் செய்யப்படும்.

தொடர்ந்து 5:30 முதல் 6 மணிவரை பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான உரியடித்தலில் சிறுவர், சிறுமிகள் பங்குபெறுவர். முடிவாக 6 முதல் 6:30 வழமையான சீரடி சாயி மாலை ஆரத்தியுடன் லட்டு பிரசாதம் வழங்கப்படும்.



# கடும் காற்றினால் கூரைகள் பறந்தன

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட அவரவத்தை பிரிவில் ஞாயிற்றுக்கிழமை (03) கூரை தகடுகள் பறந்தன.

அந்த குடியிருப்பு பகுதியில் இருந்த குடியிருப்புகள் உறவினர் இல்லங்களில் தற்காலிகமாக தங்கியுள்ளனர். இது குறித்து அப்பகுதிக்கு இடர் முகாமைத்துவ குழுவினரோ கிராம உத்தியோகத்தர் சென்று பார்வை இட வில்லை என அந்த குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஷெல் குண்டு மீட்பு

தீஷான் அஹமட்



மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலநகர் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த ஷெல் ரக குண்டொன்று காணப்படுவதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர் துப்பரவு பணியை ஞாயிற்றுக்கிழமை (03) மேற்கொண்டிருந்த போது வெடிபொருள் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து குறித்த இடத்தில் தற்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# 4 கடலாமைகளின் உடல்கள் மீட்பு

எஸ் தில்லைநாதன்

நெடுந்தீவு கடற்கரையில் நான்கு கடல் ஆமைகள் இறந்து கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டில் ஒரு மாதத்துக்குள் 35 ஆமைகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி முதல் மேற்கு கடற்கரையில் 31 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கின. மேலும் 3 ஆமைகளின் ஓட்டில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுக்கான சிகிச்சைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வெடி மருந்தை பயன்படுத்தி மீன் பிடித்தமை காரணமாகவே மேற்கு கடற்கரையில் கடலாமைகள் உயிரிழந்தன என்று கூறப்படுகின்றது.

# மாணவன் வரலாற்று சாதனை

கியாஸ் ஷாபி

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில், 2023 ஆம் ஆண்டுக்கான 18 வயதின் கீழ், நடைபெற்ற டைக்வொடன்டோ (Taekwondo) போட்டியில், கிண்ணியா அஸ் ஸபா வித்தியாலய மாணவன் எம். எம். றிப்னாஸ் 3 ஆம் இடத்தை பெற்று கிண்ணியா மண்ணிற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் டைக்வொன்டோ போட்டியில் கிடைத்த முதல் வரலாற்று வெற்றி இது, என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜூன் மாத விபத்தில் சிக்கிய அதிபர் செப்டெம்பரில் மரணம்

செந்தூரன் பிரதீபன்



தம்புள்ளை-கெக்கிராவ பிரதான வீதியின் திரப்பன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஜூன் 11 ம் திகதி இடம் பெற்ற வாகன விபத்தில் , காயங்களுக்கு உள்ளாகி அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அதிபர் திங்கட்கிழமை (04) அதிகாலை உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாவி மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், கல்விளான் குளம் மகாவித்தியாலயத்தின் அதிபருமான இராசேந்திரன் நிக்சன் (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சுற்றுலா சென்று விட்டு மல்லாவி திரும்பிக் கொண்டிருந்த வாகனம், வீதியோரம் நின்றிருந்த பேருந்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியிருந்தது. அதிபர் தலைமையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி இருந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நரம்பியல் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் 765 கிராம் கஞ்சாவுடன் மண்டைதீவு பகுதியைசேர்ந்த 32 வயதுடைய நபர் ஞாயிற்றுக்கிழமை (03) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழு அவரை கைது செய்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# 30ஆயிரம் மெற்றிக்தொன் கனிய மணல் ஏற்றுமதி

திருகோணமலை துறைமுகத்தில் இருந்து 30 ஆயிரம் மெற்றிக்தொன் கனியமணல் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் ஏற்றுமதி செய்யப்பட்ட அதிக பெறுமதிகொண்ட பெருமளவான கனியமணல் இது என இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் தெரிவிக்கின்றது.

இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் மேற்கொண்ட சர்வதேச கேள்வி மனுக்கோரல் ஊடாக விலைகூறல்களைச் சமர்ப்பித்திருந்த ஐந்து நிறுவனங்களில்


றையன் றொக்வூட்

இருந்து சீன நிறுவனம் ஒன்று தெரிவு செய்யட்டிருந்தது. சீன நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதியாக புத்தளம் இல்மனைற் நிறுவனம் நியமிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், திருகோணமலை துறைமுகத்தின் அஷ்ரப் இறங்கு துறையில் இருந்து கனியமணலை கப்பலேற்றும் நடவடிக்கைகள் கடந்த வாரம் இடம்பெற்றது.

புத்தளம் இல்மனைட் நிறுவனத்தின் பொது முகாமையாளரும் கனிம அகழ்வுத் துறை நிபுணருமான றையன் றொக்வூட் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நமது நாடு வழமையாக இறக்குமதிகளையே மேற்கொள்கின்றது ஆனால் இப்போது எமது நாட்டிலேயே அகழப்பட்ட கனியமணலை ஏற்றுமதி செய்கின்றோம். இது சிறப்புவாய்ந்த ஏற்றுமதியாகும். ஏனெனில் இதன்மூலம் பல மில்லியன் அமரிக்க டொலர் அந்நியச் செலாவணி இலங்கைக்கு கிடைக்கும். நாட்டின் டொலர் பிரச்சினையை தீர்ப்பதற்கு இது உதவும் என்றார்.

# விஞ்சும் விலைச் சுமையால் நசுங்கி நலிந்துபோகும் மக்கள்

விலைகள் அதிகரிக்கப்படும் போது மட்டுமே மின்னல் வேகத்தில் அதிகரித்துவிட்டு, விலையை குறைக்கும் போது ஆமை வேகத்தை கையாளும் நடைமுறையொன்றும் புதிதல்ல. இந்த அரசாங்கமும், பல வர்த்தகர்களும் அதே பல்லவியை பாடிக் கொண்டிருக்கின்றனர்.

விலைகள் குறைக்கப்படும் போது, சேவைகளின் கட்டணங்களில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படுவதில்லை. என்னதான் விலைகளைக் குறைத்தாலும் மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமைகளில் எவ்விதமான மறை (-) தாக்கத்தையும் செலுத்துவதே இல்லை. இதற்கிடையே, எரிபொருள் மற்றும் எரிவாயுவின் விலைகள் அதிகரித்துள்ளன.

விலையேற்றத்தால் பாரிய சுமைகளை சுமந்துகொண்டு நத்தையைப் போல நகர்ந்து கொண்டிருக்கும் மக்களின் முதுகில் மற்றுமொரு சுமை ஏற்றப்பட்டுள்ளது. இது அவர்களின் சாதாரண வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பல முறைகள் சுட்டிக்காட்டியதைப் போல, விறகு அடுப்புகளை பயன்படுத்தும் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில், எரிவாயுவினால் சமைக்கப்படுவதாகக் கூறி மீண்டும் விலைகளை அதிகரித்துக்கொள்வர்.

அதேபோல, விலைக்கு ஏற்றவகையில் பொருட்களின் தரத்தை எதிர்பார்க்கமுடியாது. சில வேளைகளில் சாப்பாட்டு பொதிகளுக்கான கட்டணங்களையும் அதிகரித்துக்கொள்ளக் கூடும். இவற்றையெல்லாம் நுகர்வோர் அதிகார சபை, கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருக்கும் என்பது மட்டுமே உண்மை

எரிபொருளுக்கான சூத்திரத்தை அறிமுகப்படுத்திய அரசாங்கம், விலை அதிகரிப்புக்குப் பின்னர், சூத்திரத்தை கைவிட்டுவிட்டது. எரிபொருள்களுக்கான விலை குறைப்பின்போது ஏனைய, சேவைகளின் கட்டணங்களில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படுவதில்லை.

பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகள் மத்தியில் சுகாதாரத்தை உறுதி செய்தல் மற்றும் சுகாதாரப் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில், உள்நாட்டில் சுகாதார அணையாடைகளை தயாரிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பிரதான 05 மூலப்பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து வரிகளையும் நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த அணையாடைகளின் விலை அதிகரிப்பினால், பெண்களும் பாடசாலை மாணவிகளும் பல்வேறான அசௌகரியங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். பாடசாலைகளில் மாணவிகளின் வரவில் வீழ்ச்சி, பாதுகாப்புடன் கடமைகளுக்கு செல்லமுடியாத நிலைமையை பெண்கள் எதிர்கொண்டுள்ளனர். இதுவும் புதிதல்ல.

அணையாளடைகளை கொள்வனவு செய்வதற்கு போதுமான வருமானம் இன்மையாலும் தலைக்கு மேல் எகிறி நிற்கும் விலை அதிகரிப்பாலும், மாதவிடாய் காலங்களில் பல பெண்கள் வீடுகளுக்குள்ளே முடங்கிக்கிடக்கவேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

கோதுமை மா உள்ளிட்ட பிஸ்கட் தயாரிப்புக்கான மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தபோது, பிஸ்கட் பெக்கட்டுகளின் விலைகளும் அதிகரித்தன. ஆனால், பிஸ்கட் விற்பனையில் பாரிய வீழ்ச்சியை சந்திக்கவேண்டிய நிலைமை உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டது. அதன்பின்னர் விலைகள் குறைக்கப்பட்டன. எனினும், பக்கட்டுகளில் இருக்கவேண்டிய பிஸ்கட்டுகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

சாதாரண மக்களின் பசியை போக்கும் பராட்டாவை பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஒவ்வொரு நிறுவையிலும் இதேபோன்ற உத்திகள் கையாளப்படுவது ஒன்றும் புதிதல்ல.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# முஸ்லிம்களின் பக்கமுள்ள நியாயங்கள்

மொஹமட் பாதுஷா

தமிழ்த் தரப்புடன் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது. மறுபுறத்தில் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு அமுலாக்கம் ஆகிய விடயங்கள் மேலும் தாதமடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமிருப்பதாகவும் இன்னுமொரு தகவல் கசிந்திருக்கின்றது.

ஆக, அப்படியான இழுபறிகள் இம்முறையும் நிகழுமானால் இன்னுமொரு தடவை பேச்சுவார்த்தை, தீர்வு, பகிர்வு என்று காலத்தை இழுத்தடித்து, மக்களைப் பராக்குக் காட்டியதுதான் மீதமாக அமையும் எனக் கூறலாம்.

எவ்வாறிருப்பினும், 13ஆவது திருத்தத்தை அமுலாக்குதல் பற்றியும் அதிலுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பற்றியும் ஒரு சூடான விவாதத்தை தொடக்கி வைத்ததன் மூலம் பெருந்தேசியத்திற்கு தீமைகளை விட நன்மைகளே அதிகமாக கிடைத்துள்ளன என்றுதான் கருத வேண்டியுள்ளது.

குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட ஏனைய பொருளாதார நெருக்கடிகள், அரசியல் குழப்பங்கள் எல்லாம் மூடிமறைக்கப்பட்டுள்ளன. அல்லது அதனை விட்டும் மக்களின் கவனம் வெற்றிகரமாக திசை திருப்பப்பட்டுள்ளது.

இப்போது, 'இந்த வேலையை' தொல்பொருள் மற்றும் பௌத்த விகாரை நிர்மாணித்தல் போன்ற விவகாரங்கள் செய்யத் தொடங்கியிருக்கின்றன என்றே கருத வேண்டியுள்ளது.

இந்த தருணத்தில், முஸ்லிம் சமூகம் 13ஆவது திருத்த அமுலாக்கத்தை எதிர்க்கவில்லை. ஆயினும் அதிலுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பகிரப்படுவதை விரும்பவில்லை. வடக்கும் கிழக்கும் இணைக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டில் முஸ்லிம்கள் உள்ளனர்.

இதற்கான காரணகாரியங்களை கணிசமான தமிழ் அரசியல்வாதிகளும் மக்களும் விளங்கிக் கொண்டுள்ளார்கள். இதிலுள்ள நியாயங்களை புரியாமல் முஸ்லிம்கள் தீர்வு முயற்சிகளை குழப்புகின்றார்கள் என்ற கோணத்தில் கருத்துக்களை முன்வைக்க முனைவது நல்லதல்ல. இது சொற்பளவானோரின் விளக்கமின்மையே. இருப்பினும். அவர்களும் இதனை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

சுருக்கமாகக் கூறினால், முஸ்லிம்கள் கடந்த காலத்தில் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் அடிப்படையிலேயே இந்த விவகாரங்களை நோக்குகின்றனர். வடக்கும் கிழக்கும் இணைந்திருந்த போது ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை அடிப்படையாக வைத்தே இவ்விரு மாகாணங்கள் மீள இணைக்கப்படுவதையும் மேற்படி ஒருசில அதிகாரங்கள் பகிரப்படுவதையும் முஸ்லிம் சமூகம் ஒரு சாதகமற்ற நிலைமையாக நோக்குகின்றது.

தேசிய முக்கியத்துவமிக்க பேச்சுக்களில் முஸ்லிம் சமூகத்திற்கு உரிய இடம், தனி அந்தஸ்து பல தடவை மறுதலிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் உரிமைகளுக்காக, இனப் பிரச்சினை தீர்வில் தங்களது பங்கை உறுதிப்படுத்துவதற்காக முஸ்லிம் சமூகமோ அரசியல் தலைவர்களோ போராடவில்லை.

ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற, அங்கிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் யுத்தம் காரணமாகவும் ஆயுத ரீதியான அடக்குமுறையின் காரணமாகவும் பல இழப்புக்களை, நெருக்கடிகளை சந்தித்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் கடந்த காலங்களில் பெற்ற அனுபவங்களை ஒரு பாடமாக வைத்தே தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதிலும் நியாயமுள்ளது.

அந்த வகையில் நோக்கினால், பொலிஸ் அதிகாரம் பகிரப்படுவதை குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் விரும்பவில்லை. அதேபோல் காணி அதிகாரம் பகிரப்படுவது நல்லது என்றாலும், அவ்வதிகாரம் நடுநிலைமையுடன் முஸ்லிம்களையும் சரிசமமாக கையாளுமா என்ற ஐயப்பாடு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது.

வடக்கும், கிழக்கும் இணைந்திருந்த போது வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக இருந்தார். இணைந்த வடகிழக்கின் முதலும் கடைசியுமான முதலமைச்சர் அவர்தான். அந்த மாகாண சபையில் பல முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்கள் இருந்தார்கள்.

ஆனால், அக்காலத்தில்தான் வடக்கில் இருந்து ஒரு இலட்சம் முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டார்கள். வடபுல முஸ்லிம்கள் மேலும் பல நெருக்கடிகளை முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சமகாலத்தில் கிழக்கில் பல அட்டூழியங்கள் நடந்தேறின. பள்ளிவாசல்களில் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன. வயல்வெளிகளில், பாதையில், புனித பயணம் சென்று திரும்புகையில் உயிர்ப்பலி எடுக்கப்பட்டது. கப்பம், கடத்தல் என்பவற்றுக்கு மேலதிகமாக இவை எல்லாம் நடைபெற்றதை வரலாறு அறியும்.

இவற்றை விடுதலைப் புலிகள் மட்டுமே செய்ததாக குறிப்பிடவும் முடியாது. மாறாக, வேறு தமிழ் ஆயுதக் குழுக்களும் இவ்வாறான காரியங்களைச் செய்தன. எனவே இதுபோன்ற இன்னும் எத்தனையோ சம்பவங்களினால் முஸ்லிம்கள் பயந்து போயுள்ளனர்.

கிழக்கில் முஸ்லிம்களோ தமிழர்களோ தனித்து ஆட்சியமைக்க முடியாது. இந்தப் பின்னணியில் தமிழர்களின் அரசியல் அதிகாரம் ஓங்கக் கூடிய சாத்தியங்கள் இல்லாமலில்லை. அப்படியான நிலை வந்தால் அல்லது ஏதோ ஒரு அடிப்படையில் பொலிஸ் அதிகாரம் பகிர்ந்து வழங்கப்பட்டால் அது முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாக வருமா என்று முஸ்லிம்கள் சிந்திக்கின்றனர்.

மாகாண பொலிஸில் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களின் விகித பங்கும் அதிகாரமும் நடைமுறையில் எவ்வாறு பயன்படுத்தப்படும்? அதனால் குழப்பங்கள், அச்சுறுத்தல்கள் வருமா? என்பது இன்னும் தெரியாது. எனவே, முஸ்லிம் சமூகம் பொலிஸ் அதிகாரம் வடக்கு,கிழக்கில் பகிரப்படுவதை விரும்பவில்லை எனலாம்.

காணி அதிகாரம் மாகாணங்களுக்கு பகிரப்படுவது நல்ல விடயமே. இதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாக கருத இடமில்லை. ஆயினும், காணி அதிகாரங்களை கையில் வைத்திருக்கின்ற தரப்பு அதனை இன விகிதாசாரப்படி, நியாயமாக நடைமுறைப்படுத்துமா என்பதில்தான் நம்பிக்கையீனங்கள் உள்ளன.


வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்களுக்கு இரண்டரை இலட்சம் ஏக்கருக்கு குறைவில்லாத காணிகளின் பிரச்சினைகள் உள்ளன. இவற்றில் சொற்பளவான பிரச்சினைகளுக்குக் கூட முஸ்லிம் அரசியல்வாதிகள் தீர்வு காணவில்லை. அதேநேரம் குறிப்பாக கிழக்கில் முஸ்லிம்களின் சனத்தொகைக்கு அரைவாசி அளவுக்கு கூட காணி உரிமைகள் இல்லை. முஸ்லிம் ஊர்களை விஸ்தரிக்க முடியாத நிலை உள்ளது.

இவ்வாறான சூழலில் காணி அதிகாரம் என்பது மாகாண சபை அதிகாரத்தின் படியே தீர்மானிக்கப்படும் என்ற நிலை வந்தால், அது முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகளை தீர்த்து, விகிதாசார அடிப்படையிலான காணி பகிர்விற்கு வழிகோலுமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

அப்படி நடந்தால் நல்லதே. ஆனால், உத்தேச காணி அதிகாரமானது அதற்கு மாற்றமாக தற்போதிருக்கின்ற காணிப் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கிவிடுமா என்ற எண்ணம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது. காணி அதிகாரம் முஸ்லிம் சமூகத்திற்கும் அனுகூலங்களைக் கொண்டுவரும் என்பது உறுதிப்படுத்தடும் என்றால் அதனை எதிர்க்க வேண்டிய அவசியம் வராது.

தமிழர்களுக்கு தீர்வு வழங்கப் போவதாக பெருந்தேசியக் கட்சிகளும் அரசாங்கங்களும் இதற்கு முன்னர் பல தடவை அரசியல் நாடகங்களை அரங்கேற்றியுள்ளன. 'தொட்டிலை ஆட்;டிவிட்டு சிறிது நேரத்தில் பிள்ளையை கிள்ளிவிட்ட' கதையாக, எல்லாம் குழப்பியடிக்கப்பட்டு தீர்வு முயற்சிகள் கைவிடப்பட்ட பதிவுகள் நிறையவே உள்ளன. அதுபோல இம்முறையும் நடக்கலாம்.

ஆனால், அதனையெல்லாம் தாண்டி ஏதேனும் ஒரு பொறிமுறை ஊடாக இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வோ பகுதியளவான தீர்வோ வழங்கப்படுமாக இருந்தால், இன முரண்பாட்டு விவகாரத்துடன் தொடர்புபட்ட மற்றைய இனக் குழுமமான முஸ்லிம்களின் கரிசனைக்குரிய விடயங்களும் நியாயங்களும் நேரிய மனதுடன் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதில் இரு நிலைப்பாடுகள் இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

ஆரம்பத்தில், அலுவலகத்தில் புதிதாக கடமைக்கு வந்த அலுவலர்கள், தங்கள் வேலை மிகவும் கஷ்டமானது என எண்ணிக் கொள்வார்கள்.

ஆனால், காலங்கள் செல்லச் செல்ல, கடமைகளில் திறமையானவர்களாக மாறிவிடுகின்றார்கள்.

ஆனால், ஒருசிலர் தங்கள் கருமங்களில் ஆர்வம் இன்மையால், தொழிலில் முன்னேற்றம் அடையாமல், இருந்துவிடுகின்றார்கள்.

இவர்களுக்குப் பின்னர், வேலைக்குச் சேர்ந்த புதிய அலுவர்கள், தொடர்ந்து மிக ஆர்வத்துடன் கடமைகளைச் செய்தமையால், தமக்கு முன்னர் நியமனம் பெற்றவர்களைவிட, உயர்பதவிகளைப் பெற்றுவிடுகின்றார்கள்.

எல்லோரும் திறமைசாலிகளாக உயர முடியும். தொடர்ச்சியான முயற்சிகள் அவசியமானவை.

செய்யும் தொழிலை நேசித்தால், எந்தச் சுமையான கடமைகளும் சுவாரஸ்யமாக மாறிவிடும். களிப்புடன் கருமம் ஆற்ற வேண்டும்.

சொந்தப் பிரச்சினைகளை அலுவலகத்துக்குச் சுமத்தலாகாது. தொழில் எமது உயிருக்கும் மேலானது. சமூகத்துக்கும் உங்கள் குடும்ப நலனுக்கும் நாம் ஆற்றும் நற்செயல்களே, முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும். முழுமையான இரசனையுடனும் ஈடுபாட்டுடனும் காரியங்களை ஆற்றுக!

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இரு குளங்களையும் புனரமையுங்கள்

கிளிநொச்சி முழங்காவில் கிராமத்தில் இரு குளங்களை புனரமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முழங்காவில் குளம், கதிராவில் குளம் என்பவற்றினை புனரமைக்குமாறே கோரிக்கை விடுத்துள்ளனர்.

முழங்காவில் கிராமத்தில் கூடுதலான குடும்பங்கள் ஆழ்துளைக் கிணற்றினை நம்பியே வாழ்கின்றன.இந்நிலையில் தற்போது இரு குளங்களும் முற்றாக வற்றியதன் காரணமாக எதிர்காலத்தில் இரு குளங்களின் அணைக்கட்டினையும் உயர்த்தி புனரமைப்பதன் மூலம் வறட்சியான காலங்களிலும் இக்குளங்களில் நீர் காணப்பட்டால் முழங்காவில் பிரதேசத்தில் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும்.

குடிநீருக்கான நெருக்கடி ஏற்படாது. பூநகரி பிரதேசத்தில் பல சிறிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி இரு குளங்களையும் புனரமைப்பதன் மூலம் முழங்காவில் மக்கள் நன்மையடைவார்கள். தற்போது பூநகரியின் பல கிராமங்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள கிராமங்களுக்கு பிரதேச சபை, பிரதேச செயலகம் குடிநீர் விநியோகத்தினை மேற்கொண்டு உள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்



# நாங்களும் மனிதர்களே



தர்ஷினி ராதாகிருஸ்ணன்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள்;துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

வேட்டையாடி உண்ணும் புலியானாலும் புல்லை உண்ணும் பசுவானாலும் எந்த உயிரினமானாலும் உணவு உண்ணும் பாணி என்பது பொதுமைப்பட்டே காணப்படுகின்றது. தனக்கான உணவை ஆசுவாசமாக தன் நிலையிலிருந்து பாதுகாப்பான ஓர் இடத்திலேயே உணவை உண்ணும். பெரும்பாலும் எந்தவொரு உயிரினமும் மழையினில் நனைந்தவாறெல்லாம் உணவு உண்பதை பார்க்க முடியாது. பெரும்பாலும் மனிதர்களும் அவ்வாறுதான்.

நாம் உழைப்பதே அரைசாண் வயிற்றுதிருப்திக்காகத்தான். ஆனால் இன்றும் ஒரு சமூகமே வேலைத்தளத்தில் நின்றுக்கொண்டும் நனைந்துக்கொண்டும் ஆங்காங்கே ஒதுங்கியும் நின்று அவசர அவசரமாக உணவை உண்டுவிட்டு மீண்டும் இயந்திரமாய் வேலைசெய்துக்கொண்டிருக்கின்றது. இந்த நவீன யுகத்தில் எத்தனையோ வசதிகளும் சலுகைகளும் தொழிலின் தன்மைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் கிட்டத்தட்ட 200 வருடங்களுக்கு மேல் உணவு உண்பதற்கான அடிப்படை வசதிகளைக்கூட பெற்றுக்கொள்ளாமல் ஒரு சமூகமே இன்றுவரை மனித இயந்திரங்களாய் உழைத்துக்கொண்டேயிருக்கின்றது.

ஆமாம், நான் சொல்வது எங்கள் மலையக தேயிலைதோட்ட தொழிலாளர்களைத்தான். காலை 8 மணிக்கு தொழிலுக்கு சென்று மாலை 5 மணி வரை வேலைசெய்யும் இவர்கள் தங்களுடைய உணவுவேளையின்போது உணவு உண்பதை பார்த்தால் நிச்சயம் எவ்வாறான மனமும் கரைந்துவிடும். இவர்களில் பெரும்பாண்மையானோர்களின் உணவு ரொட்டியும் தேநீரும்தான். இவர்கள் கொண்டுசெல்லும் உணவு பெரும்பாலும் சுயம் இழந்து குளிர்வடைந்து விடும். அதுவும் மழைக்காலத்தில் சொல்லவே தேவையில்லை. மழைநீர் சொட்ட சொட்ட ஆங்காங்கே நின்ற வண்ணம் உணவு உண்ணுவர். கொண்டுவந்த தேநீர் முதலான இவர்களின் உணவனைத்தும் குளிர்கால உணவாகவே மாறிவிடும்.

**“ பாம்பு, விஷ பூச்சிகள், அட்டை போன்றவை தொடர்பான அச்சத்துக்கு மத்தியிலே இவர்கள் கொண்டுசெல்லும் உணவை உண்ணுகின்றனர். இடையிடையே அட்டை கடித்து ரத்தம் கசிந்துக்கொண்டிருக்கவே அட்டையை ஒரு கையில் பிடித்து ஏறிந்துவிட்டு மறு கையில் உணவு உண்ணும் கொடுமையான அனுபவங்களுமுண்டு**

வெயில் காலத்திலாவது ஆங்காங்கே காணப்படும் திட்டுக்களில் அமர்ந்து உணவு உண்ண முடியும். ஆனால், மழைக்காலத்தில் வெட்ட வெளியிலோ அல்லது மரங்களுக்கு கீழோ நின்றுதான் உணவு உண்ண வேண்டும். அப்போது மழைநீர் உணவில் சொட்ட சொட்ட இவர்கள் உணவை உண்ணுவார்கள். மழைக்காலத்தில் அனேகமானவர்கள் உணவு கொண்டுவருவதேயில்லை. காலையிலிருந்து மாலை வரை உணவின்றியே வேலை செய்துவிட்டு வீடு வருபவர்களில் அநேகர் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு உள்ளாவதையும் அவதானிக்க முடிகின்றது.

தேயிலைதோட்ட பெண்கள் கொண்டுசெல்லும் உணவுகளை பாதுகாப்பாக வைப்பதற்கு பாதுகாப்பான இடம் ஏதுமில்லை. பாம்பு, விஷ பூச்சிகள், அட்டை போன்ற உயிரினங்கள் தொடர்பான அச்சத்துக்கு மத்தியிலே இவர்கள் கொண்டுசெல்லும் உணவை உண்ணுகின்றனர். இடையிடையே அட்டை கடித்து ரத்தம் கசிந்துக்கொண்டிருக்கவே, அட்டையை ஒரு கையில் பிடித்து எறிந்துவிட்டு மறு கையில் உணவு உண்ணும் கொடுமையான அனுபவங்கள் இவர்களுக்கு மட்டுமே சொந்தம்.

அவ்வப்போது உணவு ஒவ்வாமை காரணமாக தேயிலைதோட்ட பெண்கள் வீடு திரும்பும் சம்பவங்களும் இடம்பெற்றுக்கொண்டுத்தான் இருக்கின்றன. ஆனால் நாம் அவற்றை பெரிதாக கண்டுக்கொள்வதில்லை. தொழில்செய்யும் இடத்தில் கிடைக்கும் அடிப்படை சலுகைகளைக்கூட பெறாமல்தான் ஒரு சமூகமே இவ்வாறு அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெழும்பு தோட்ட தொழிலாளர்கள்தான். அதனையும் தாண்டி அவர்களும் சக மனிதர்களே. உடல், உள சகல அடிப்படை சலுகைகளுக்கான உரித்துடையவர்கள்தான் அவர்களும். தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படை நலன் தொடர்பில் நாம் கவனம் கொள்ள வேண்டும். அவர்கள் தேயிலை மலைகளில் பாதுகாப்பாகவும் ஓய்வாகவும் ஆரோக்கியமாகவும் உணவை உண்பதற்கான அடிப்படை வசதிகளோடு கூடிய ஓய்வறைகளை அமைத்துக்கொடுப்பதில் தோட்ட நிர்வாகமும் அரசாங்கமும் சிந்திக்க வேண்டும். சாதாரண மனிதர்களை போல இவர்களும் அடிப்படை சலுகைகளோடு தொழில் செய்யவேண்டும்.

# உளவளத்துணை பற்றி அறிந்திருக்கிறீர்களா ?



தேவ அமலதாஸ் மறிஸ்ரலா
உளவியல் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

கருவறை தொடங்கி கல்லறை வரையிலான மனிதனுடைய வாழ்க்கை காலம் முழுவதும் அவன் பல்வேறான பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொண்ட வண்ணம் காணப்படுகின்றான். இவ்வாறான நிலைமைகளில் தம்முடைய ஆற்றல்களையும் திறமைகளையும் பயன்படுத்தி அந்தப் பிரச்சனைகளில் இருந்து சிலர் வெளியே வந்து விடுகின்றனர் ஆனால் பலர் அப்பிரச்சனைகளை முகம் கொடுக்க முடியாது அதற்குள்ளே அகப்பட்டு நாளாந்தம் தமது வாழ்வினை பெரும் துன்பங்களோடு கடந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது .முக்கியமான ஒரு விடயத்தை நோக்க வேண்டி உள்ளது அதாவது உடல் ரீதியாக ஏதேனும் ஓர் அசௌகரியங்களோ, நோய் நிலைமைகளோ ஏற்படுகின்ற போது மருத்துவரை அணுகி அதற்கு சிகிச்சை பெறுகின்றான். தனக்கு ஏற்படுகின்ற உடல் ரீதியான நோய் நிலைமைகளை எவ்வித தயக்கமும் இன்றி மருத்துவரை அணுகி அதற்கான மருத்துவத்தைப்பெற்றுக் கொள்கின்றான். ஆனால் அவனுக்கு உளரீதியாக ஏற்படுகின்ற அசௌகரிய நிலைமைகள்இ அசாதாரண நிலைமைகள் உளப் பிரச்சினைகள், என்பவற்றினை எவ்வித தயக்கமும் இன்றி வெளிப்படையாக கூறி அதற்கான தீர்வுகளினையோ, பாதிப்புகளுக்கான சிகிச்சையினையோ பெறுவதற்கு தயக்கம் காட்டுகின்றான்.

இதற்கு பிரதான காரணமாக அமைவது தன்னை சுற்றியுள்ள அயலவர்களோ குடும்பத்தினரோ சமூகத்தினரோ என்ன நினைத்து விடுவார்கள் என்ற எண்ணத்தினால் ஆகும். ஒருவர் உழரளெநடட;பெ செயற்பாட்டிற்கு செல்வார் ஆயின் அவரை இச்சமூகம் ஏதோ ஒரு வேறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்கின்றது. இவ்வாறான தவறான கண்ணோட்டமே உளவளச் செயல்முறையை மக்கள் நாடாமைக்கு வழிவகுப்பதாய் அமைகின்றது. அது பற்றிய பூரண புரிதல் தெளிவான விளக்கம் இன்மையே இதற்கான காரணமாகும்.

இவ்வாறாக மனிதர்கள் தமது வாழ்க்கை பயணத்தில் எதிர்கொள்ளுகின்ற தடைகளை வெற்றி கொள்வதற்கு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவி உள ஆற்றுப்படுத்தல் செயல்முறையாக காணப்படுகின்றது. நாளாந்தம் மனிதன் எதிர்கொள்ளும் பல்வேறு உளப் பிரச்சனைகளுக்கு அதை எதிர்த்து முகம் கொடுக்க கூடிய வகையில் அவனை தயார்படுத்துகின்ற உளவியல் நுட்பமாக இது திகழ்கின்றது .இத் துறையானது உழரளெநடட;பெஇ உளவளத் துணை ஆற்றுப்டுத்தல் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது .துணை நாடி தன்னுடைய அக மற்றும் புற வளங்களை ஒருங்கிணைத்து தன் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் பிரச்சனை தீர்த்தல் செயன்முறைறையை குறிக்கின்றது .உள ஆற்றுப்படுத்தலில் துணை நாடி தன்னுடைய மறைந்து கிடக்கின்ற நற்பண்புகள் நல்ல மனப்பான்மை திறமைகள் ஆற்றல்கள் என்பவற்றை அடையாளம் காணவும் விருத்தி செய்யவும் உதவுகின்றதாய் அமைகின்றது.

மேலும் பல்வேறுபட்ட பிரச்சனைகளோடும் சிக்கலோடும் வருபவரை ஏற்று மதித்து அவரது பிரச்சனைகளை உன்னிப்பாக செவிமடுத்து மனம் திறந்து கதைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அவரது உணர்வுகளையும் மனவெழுர்ச்சிகளையும் புரிந்து கொண்டு அவரது உண்மை நிலையை அவரே உணர வைத்து அவரது பிரச்சனைகளுக்கு அவரே தீர்வினை காண்பதற்கு ஏற்ற உளரீதியாக வலுவூட்டி நன்னெறி படுத்துகின்ற செயற்பாடாக இந்த உளவளத் துணை செயற்பாடாகும்.

உள ஆற்றுப்படுத்தல் செயல் முறையில் உறவாடல் மற்றும் உரையாடல் திறன்கள் பெரிதும் கையாளப்படுகின்றன .உரையாடல் செயல்முறைகளின் மூலம் துணைநாடிகளினுடைய பிரச்சனைகள் அவரது மனவெழுச்சிகள் உணர்வுகள் அனுபவங்கள் என்பவை பகிரப்படுகின்றன .மனதை அழுத்திக் கொண்டிருக்கின்ற பல்வேறு விடயங்கள் துணை நாடியினால் வெளிக் கொண்டுவரப்பட்டு உளவளத்துணையாளரிடம் பகிர்வதன் மூலம் அழுத்த நிலைமைகளிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பினை இது வழங்குகின்றது அத்தோடு துணை நாடியினால் பகிரப்பட்ட விடயங்களை நன்று செவிமெடுத்து அதற்கான தீர்வுகளை உடனடியாக கூற முனையாது பிரச்சனை நிலைமையினை அவரே உணர் தானாகவே அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு ஒரு உந்து சக்தியாக மற்றும் வழிகாட்டியாக உள ஆற்றுப்படுத்துனர் செயற்படுகின்றார்.

குறிப்பாக உளவளத் துணையை நாடுபவர்கள் உள நலத்துடன் இருப்பவர்களே என்பதை நாம் புரிந்து இருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

**“ தன் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் பிரச்சனை தீர்த்தல் செயன்முறைறையை குறிக்கின்றது .உள ஆற்றுப்படுத்தலில் துணை நாடி தன்னுடைய மறைந்து கிடக்கின்ற நற்பண்புகள் நல்ல மனப்பான்மை திறமைகள் ஆற்றல்கள் என்பவற்றை அடையாளம் காணவும் விருத்தி செய்யவும்**

அவர்களுக்கு வாழ்க்கை பிரச்சனைகளை கடந்து செல்லவே உதவி தேவைப்படுகின்றது இவர்கள் மனநோயாளியோ உள நல குறைபாடு உள்ளவர்களோ அல்ல .இவ்வாறான தவறான எண்ணத்தினை களைந்து விடல் நன்று. இந்த உள ஆற்றுப்படுத்தல் செய்முறை ஆனது யார்யாருக்கெல்லாம் தேவைப்படுகிறது என்று நோக்கும்போது

குடும்ப உறுப்பினர்கள் அல்லது உங்கள் நட்பு வட்டாரத்தில் யாராயினும் ஒருவருக்கு ஏதாவதொரு பிரச்சினை ஏற்பட்டு மனமுடைந்துபோய் இருப்பின்இ அதனால் தம்முடைய அன்றாட செயற்பாடுகளைச் செய்துகொள்ள முடியாமல் அவர் கஷ்டப்படுவாராயின் அவருக்கு உளவளத்துணையாளரின் உதவி தேவைப்படுகின்றது.

சுயமாக ஒருவர் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் தீர்மானம் எடுக்க முடியாமலும் உள்ள எந்தவொரு சந்தர்ப்பத்திலும்இகுடும்பத்தில் ஏற்படுகின்றன பிணக்குகள்இ பிரச்சினைகள்இகுழுக்களுக் கிடையிலான முரண்பாடுகள் இ கல்விசார் பிரச்சினைகள் தொழில்சார் பிரச்சினைகள்இஉளப் பாதிப்புகள்இ தீராத நீண்ட கால நோய்கள்இதிடீர் அனர்த்தம்இ அழிவுஇ இழப்பின் போது கடுமையான மனம் உடைந்து போதல்இ காதல் தோல்வி மற்றும் பாலியல்சார் பிரச்சினைகள். கட்டிளமைப்பருவ மாறுபாடுகள்இ பொருத்தமற்ற நடத்தைஇ ஏதாவதொன்றுக்கு அடிமையாகியுள்ளசந்தர்ப்பங்கள். போன்ற ஏதாவதொரு பிரச்சினையை அனுபவிக்க ஏற்படின்இ இன்று உளவளத்துணையாளரின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் இதன் வழியாக அன்றாடம்சிறந்த வாழ்கையாக திட்டமிட்டுக்கொள்ள உதவியாக அமையும். மேலும் பிரச்சினையை விட்டு வெளியே வர உதவி செய்யும்.

**“ ஆரோக்கியம் என்பது வெறுமனே உடல் ரீதியான மட்டுமல்ல உடல், உள இசமூக ரீதியான நன்நிலையை ஆரோக்கியம் எனப்படுகின்றது. இதில் உடல் ரீதியாக நாம் பல்வேறு செயல்பாடுகளை ஆரோக்கியத்திற்காக செய்கின்றோம்**

இன்றைய சமூகத்தை பெரிதும் சூழ்ந்துள்ள பிரச்சனையாக கூறப்படுகின்ற தற்கொலை மற்றும் போதைப் பொருள் பாவனை சிறுவர்துஸ்பிரயோகங்கள் வன்முறைகள் போன்றவை ஏதாவது ஒரு உளப் பாதிப்பினுடைய வெளிப்டுகளாக அறியப்படுகின்றன. ஏதோ ஒரு வகையில் உள ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டுள்ள நபர்கள் அதனை இவ்வாறு பல்வேறு செயல்பாடுகளின் வழியாக வெளிப்படுத்தி வருகின்றனர் இவை சமூகத்திற்கு பெரிதும் பாதிப்பினை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றன. சரியான முறைப்படுத்தலின் ஊடாக இவ்வாறான பிரச்சனைகளை குறைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது அவற்றை நாடிச்சென்று பயனடைவது ஒவ்வொருவர் கையிலும்தான் காணப்படுகின்றது

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்த உள ஆற்றுப்படுத்தல் சேவையினை பெற்று கொள்வதற்கான வாய்ப்புகளும் வளங்களும் இன்று மிக அதிகமாகவே காணப்படுகின்றன அரச பொது மருத்துவமனைகளிலும்இ தனியார் மருத்துவமனைகளிலும்இ தனியாள் உள ஆற்றுப்படுத்தல் நிலையங்கள்இ தொழில் நிறுவனங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் இவ்வுஆற்றுப்படுத்தல் சேவையானது பரம்பி காணப்டுகின்றது.

நமது வாழ்க்கை பயணத்திலே எம்மை புடை சூழ்ந்து வருகின்ற பல்வேறுபட்ட சவால்களையும் பிரச்சனைகளையும் நாம் களைந்து அடுத்த கட்டத்தினை நோக்கி மன நிம்மதியுடன் நகர்ந்து செல்வதற்கு இந்த உள ஆற்றுப்படுத்தல் கை கொடுக்கின்றது .வெறுமனே ஒரு செயல்முறையாக மாத்திரம் நின்று விடாமல் பலரின் வாழ்க்கை மாற்றத்திற்கு உதவுகின்ற ஒரு படிக்கலாகஇ ஏணிப்படியாக இந்த செயற்பாடு காணப்படுகிறது .மனிதர்களாகிய நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருந்து விட முடியாது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் துன்பங்கள் துயரங்கள் கவலைகள் என்பவை எம்மை ஆட்கொண்டு நிலைகுலைய வைத்து விடுகின்றது இவ்வாறான நேரங்களில் எவ்வித தயக்கமும் இன்றி அருகில் இருக்கின்ற அல்லது நம்பிக்கைக்குரிய உளவளத்துணையாளருடன் உங்கள் பிரச்சனைகளையும் தேவைகளையும் எடுத்துக் கூறி அவற்றின் மூலம் சரியான தீர்மானங்களையும் கடந்து செல்வதற்கான மன வலிமையையும் பெற்றுக் கொள்ள முடியும் .

ஆரோக்கியம் என்பது வெறுமனே உடல் ரீதியான மட்டுமல்ல உடல், உள இசமூக ரீதியான நன்நிலையை ஆரோக்கியம் எனப்படுகின்றது. இதில் உடல் ரீதியாக நாம் பல்வேறு செயல்பாடுகளை ஆரோக்கியத்திற்காக செய்கின்றோம்.

ஆனால் இந்த உளம் மற்றும் சமூகம் என்ற பகுதிகளை மறந்து விடுகின்றோம். இதனால் தான் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாது தவிக்கின்றோம். எனவே அந்த உளம் மற்றும் சமூகம் என்ற பகுதிகளின் நாம் மிகுந்த அக்கறை கொண்டு உளரீதியான ஆரோக்கிய நிலைமைகள் மற்றும் உள வளங்களை கட்டி எழுப்புகின்ற செயல்பாடுகளில் மிக முக்கியமாக உள்ள ஆற்றுப்படுத்தல் செயல்முறையினுடைய அவசியத்தை அறிந்து கொண்டு எவ்வித தயக்கமோ.கூச்சமோ இன்றி எப்பொழுதெல்லாம் நம்மால் பிரச்சனையொன்றிலிருந்து வெளிவர முடியாது காணப்படுகின்றோமோ அப்பொழுதெல்லாம் செயபாட்டினை பெற்றுக்கொண்டு உள ஆரோக்கியம் உள்ள நபர்களாய் இச்சமூகத்தில் முன்னேற வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாக இருக்கின்றது .



# 40 சென்டி மீட்டர் பறந்த விக்ரம் லேண்டர்

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ கடந்த ஜூலை 14-ம் திகதி நிலவின் தென் துருவத்தை அடைய சந்திரயான்-3 எனும் விண்கலனை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

கடந்த ஓகஸ்ட் 23ம் திகதி, சந்திரயான்-3 வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தை அடைந்தது. சந்திரயான்-3 விண்கலத்திலிருந்து விக்ரம் எனும் லேண்டர் சாதனமும், பிரக்யான் எனும் ரோவர் சாதனமும் பிரிந்து, நிலவை அடைந்து, தங்கள் பணிகளை சிறப்பாக செய்து வருவதாக இஸ்ரோ தெரிவித்தது.

அவை பூமிக்கு அனுப்பும் நிலவின் புகைப்படங்களையும் அவ்வப்போது இஸ்ரோ வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், நிலவில் தரையிறங்கிய விக்ரம் லேண்டர் சாதனம் குறித்து தற்போது இஸ்ரோ அறிவித்திருப்பதாவது:

விக்ரம் லேண்டர், திட்டமிட்ட குறிக்கோளை தாண்டி சிறப்பாக செயல்படுகிறது. அது வெற்றிகரமாக ஒரு "ஹாப்" பரிசோதனையையும் நிறைவு செய்தது. கட்டளையிட்டதும், அதன் இஞ்சின்கள் செயலாக்கப்பட்டு, நிலவின் தரைப்பரப்பிலிருந்து 40 சென்டி மீட்டர் உயரத்திற்கு வெற்றிகரமாக உயரே கிளம்பி, சுமார் 30-40 சென்டி மீட்டருக்கு அப்பால் பத்திரமாக தரையிறங்கியது.

பஞ்சாப்

## திருடனுக்கு கௌரவிப்பு



குற்றச்சம்பவங்களில் ஈடுபடும் திருடர்கள் கையில் அகப்பட்டால் அவர்களுக்கு தர்மஅடி கொடுத்து பொலிஸில் ஒப்படைப்பதை கேள்விப்பட்டிருப்போம். ஆனால் பஞ்சாப்பில் மோட்டார் சைக்கிள் திருடர்களுக்கு கிராம மக்கள் மாலை அணிவித்து மரியாதை செய்த காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன. பாட்டியாலாவில் உள்ள கிராமங்களில் அடிக்கடி மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பொருட்கள் திருட்டு போயுள்ளது.

இதுதொடர்பாக பொலிஸில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கிராம மக்களே கொள்ளையர்களை பிடிக்க ரோந்து சென்றனர். அவ்வாறு சென்றபோது அங்குள்ள ஒரு கிராமத்தில் மோட்டார் சைக்கிள் திருடிய ஒருவரை பொதுமக்கள் மடக்கி பிடித்தனர். உடனே அவருக்கு கழுத்தில் மாலை அணிவித்து கைத்தட்டி மரியாதை செய்ததோடு, அதை வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பரப்பினர். இதுகுறித்து அந்த பகுதி பொதுமக்கள் கூறுகையில், நாங்கள் இவ்வாறு செய்தால் திருடர்கள் மீண்டும் திருட மாட்டார்கள் என்றனர்.

## ஜி 20 க்கு ஜின்பிங் வராததால் ஏமாற்றமடைந்த பைடன்

உலக பொருளாதாரத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்க கூடிய பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்து தீர்வு காண அமைக்கப்பட்டது உலகின் 19 நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும் உள்ளடக்கிய ஜி20 கூட்டமைப்பு.

இக்கூட்டமைப்பு, முதல் முறையாக 2008-ல் அமெரிக்காவின் வொஷிங்டனில் சந்தித்தது. தற்போது இம்மாதம் 9, 10 ஆகிய திகதிகளில் இந்திய தலைநகர் புதுடெல்லியில் இதன் அடுத்த உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்தியாவிற்கு வருகை தருகிறார். ஆனால், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின், இந்த மாநாட்டில் கலந்து கொள்ள போவதில்லை என்றும் புதினுக்கு பதிலாக ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லவ்ரவ் பங்கேற்பார் எனவும் ரஷ்யா அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.

சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே, ரஷ்ய-உக்ரேன் போர் குறித்த மாறுபட்ட நிலைப்பாடுகள் காரணமாகவும், இரு நாட்டு பொருளாதார உறவில் எழுந்துள்ள பல்வேறு சிக்கல்கள் காரணாமாகவும், சமீப காலமாக இரு நாடுகளுக்கும் இடையே உறவு சுமூகமாக இல்லை. அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாட்டு ஜனாதிபதிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்கும் போது சந்தித்து கொள்வார்கள் என்றும் அப்போது அவர்கள் இருவருக்கும் இடையிலான சிக்கல்களை தணிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடக்கலாம் எனவும் நம்பப்பட்டது.

நோபல்பரிசு விழாவில்

## மூன்று நாடுகளுக்கு அழைப்பு இல்லை



சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் இந்த ஆண்டுக்கான நோபல்பரிசு வழங்கும் விழாவில் பங்கேற்க ரஷ்யா, பெலாரஸ், ஈரான் ஆகிய நாடுகளுக்கும் அறக்கட்டளை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதற்கு சுவீடனை சேர்ந்த பல எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்து நோபல் பரிசு வழங்கும் விழாவை புறக்கணிப்பதாக தெரிவித்தனர்.

உக்ரேன் மீதான போர் மற்றும் சுவீடன் நேட்டோ அமைப்பில் இணைய ரஷ்யா எதிர்ப்பது ஆகியவை காரணமாக அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். கடும் எதிர்ப்பு காரணமாக நோபல்பரிசு வழங்கும் விழாவில் பங்கேற்க ரஷ்யா-பெலாரஸ் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு விடுத்த அழைப்பை நோபல் அறக்கட்டளை திரும்ப பெற்றுள்ளது.

அமெரிக்கா

## முடி வளர்ப்பில் கின்னஸ் சாதனை படைத்த பெண்

அமெரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள டென்னிசி மாநிலத்தின் நாக்ஸ்வில் பகுதியை சேர்ந்தவர் 58 வயதான டேமி மானிஸ். 1985-இல் வெளியான "வாய்சஸ் கேரி" எனும் இசை ஆல்பத்தின் டில் டியூஸ்டே பாடல் வீடியோவை கண்டு "முல்லெட்" என அழைக்கப்படும் சிகை வடிவத்தின் மீது மானிஸ் ஆர்வம் கொண்டார். தானும் இதே போன்று சிகையை நீளமாக வளர்த்து கொள்ள வேண்டும் என விரும்பினார்.

1990 பெப்ரவரியில் அவர் கடைசியாக ஒரு முறை சிகை திருத்தும் நிலையத்திற்கு சென்று சில மாற்றங்களை செய்து கொண்டார். சிகையின் நீளம் 5 அடி 8 அங்குலம் (172.7 சென்டிமீட்டர்).





# ஆசியக் கிண்ணம்: சுப்பர் 4-இல் பங்களாதேஷ்

ஆசியக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 4 சுற்றுக்கு பங்களாதேஷ் தகுதி பெற்றுள்ளது.

லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான குழு பி போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே சுப்பர்-4 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 334/5 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மெஹிடி ஹஸன் மிராஸ் 112 (119), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 104 (105), ஷகிப் அல் ஹஸன் ஆ.இ 32 (18), முஷ்பிக்கூர் ரஹீம் 25 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: முஜீப் உர் ரஹ்மான் 1/62)

ஆப்கானிஸ்தான்: 245/10 (44.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: இப்ராஹிம் ஸட்ரான் 75 (74), ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி 51 (60) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 4/44, ஷொரிஃபுல் இஸ்லாம் 3/36, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/41)

போட்டியின் நாயகன்: மெஹிடி ஹஸன் மிராஸ்

இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான இலங்கையை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.



## ஒலிம்பிக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள்

நூருல் ஹுதா உமர்

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகளுக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக, மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம் எனும் நோக்குடன் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இது தொடர்பாக மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்துடனான கலந்துரையாடல், பர்வின் டிரேடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் நிறுவன பணிப்பாளர் அல் ஹாஜ் கலில் முஸ்தபாவுடன் மருதமுனை முஸ்தபா கம்லக்ஸ் நிறுவன காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஒலிம்பிக் விளையாட்டு கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் ஒலிம்பிக் விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை ஒலிம்பிக் விளையாட்டு கழகத்துக்கு வழங்கி உதவிய தொழிலதிபர் கலில் முஸ்தபா, மனாரியன் 88 பிரதான செயற்பாட்டாளர் ஐ. எம்.முக்தார் ஆகியோருக்கு இங்கு நன்றிகளும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.







கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டம்:

## பிரகாசித்த மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம்

அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டத்தில் மட்டக்களப்பு மத்திய கல்வி வலயப் பாடசாலைகள் பிரகாசித்துள்ளன. இப்போட்டிகளில் 63 பாடசாலைகள் பங்கேற்ற நிலையில் 20 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவிலும் 17 வயதுகுட்பட்ட ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் மட்டக்களப்பு மத்திய வலயத்தைச் சேர்ந்த ஏறாவூர் மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலை, ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர் அல் அஸ்ஹர் பெண்கள் உயர் கல்லூரி ஆகியன சம்பியனாகியிருந்தன.

இதேவேளை, 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கல்முனை வலயத்துக்குட்பட்ட கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி சம்பியனாகியிருந்தது.



தோப்பூர் கிண்ணத் தொடர்:

## சம்பியனானது செல்வநகர் விளையாட்டுக் கழகம்

தீஷான் அஹமட்

தோப்பூர் கிண்ண கிரிக்கெட் தொடரில் செல்வநகர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

தோப்பூர் அஷ்ரப் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் 20 கடினபந்து அணிகள் பங்கேற்ற இந்த இருபதுக்கு -20 தொடரின் இறுதிப் போட்டியில் ஈஸ்ட் லங்கா விளையாட்டுக் கழகத்தை வென்றே செல்வநகர் சம்பியனாகியிருந்தது. இறுதிப் போட்டியின் நாயகனாக 16 பந்துகளில் 50 ஓட்டங்களை பெற்ற செல்வநகரின் எஸ்.டி. றியாஸ் தெரிவானார். சம்பியனான செல்வநகருக்கு 150,000 ரூபாயும் வெற்றிக் கிண்ணமும், இரண்டாமிடம் பெற்ற ஈஸ்ட் லங்கா விளையாட்டு கழகத்துக்கு 100,000 ரூபாயும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வாலிப கிண்ணத் தொடர்:

## சென். அன்ரனிஸை வென்ற ஐயனார்

அஸ்ஹர் இப்றாஹிம்

இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட வாலிப கிண்ணதொடரில், அண்மையில் நடைபெற்ற மணற்காடு சென். அன்ரனிஸுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் வென்றது. ஐயனார் சார்பாக சுபிதன், சுபீஜன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும், அன்ரனிஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை றெஜிஸ்ரனும் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 05 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.